

தமிழ்நாடு முதலமைச்சர் முக. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.08.2024) தலைமைச் செயலகத்தில், திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி ஆகிய நான்கு புதிய மாநகராட்சிகள் அமைத்துருவாக்கப்பட்டதற்கான ஆணைகளை அம்மாநகராட்சிகளின் மாமன்றத் தலைவர்களிடம் வழங்கினார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (12.08.2024) பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தவத்திரு பேரூர் ஆதீனம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபரசுவாமிகள், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந. திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ.பெரியசாமி, கண்காணிப்பு பொறியாளர் (தலைமையிடம்) ச. செல்வராஜ் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# போதைப் பொருள் ஒழிப்பு தின உறுதிமொழி ஏற்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் சட்ட விதிகளின் கீழ் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றது. கடந்த 11.08.2022 முதல் இதுவரை 76 போதைப்பொருள் வழக்குகளில் சம்மந்தப்பட்ட 154 குற்றவாளிகளுக்கு எதிராக நீதிவிசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் 45 எண்ணிக்கையிலான சுமார் ரூ.18.15 கோடி மதிப்புடைய அசையும் / அசையா சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது. மேலும், போதைப்பொருள் மற்றும் உளவெறி ஊட்டும் பொருட்கள் சட்ட (NDPS) வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளின் சுமார் 5 இலட்சம் ரூபாய் இருப்பு கொண்ட 8800 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

கடுமையான சட்ட நடிவடிக்கை மட்டுமல்லாமல், “தேவை குறைப்பு” என்ற இலக்கை அடைவதற்காக, போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிராக இளைஞர்கள், குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழ்நாடு அமலாக்கப் பணியகம், குற்றப் புலனாய்வு பிரிவு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் முதன்மைத் திட்டமான ‘Drive Against Drugs’ கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் கூடும் வணிக வளாகங்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள், திருவிழாக்கள் ஆகிய இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த 2023 ஆம் ஆண்டில், சுமார் 30 லட்சம் மக்கள் கலந்து கொண்ட மொத்தம் 1,10,603 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 2024 ஜீன் வரை, சுமார் 8.20 லட்சம் பொதுமக்கள் கலந்து கொண்ட சுமார் 23,350 விழிப்புணர்வு நிகழ்ச்சி கள் நடத்தப்பட்டுள்ளன.

**முதலமைச்சர் அவர்கள் தலைமையில் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.**

போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில்முறை கல்லூரிகளில் மாணவ, மாணவியருக்கு போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி நடத்த திட்டமிடப்பட்டது, அதன் படி, சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், இன்றைய தினம் **போதைப் பொருள் ஒழிப்பு உறுதிமொழியினை** சுமார் 1500 கல்லூரி மாணவ, மாணவியர்கள் ஏற்றுக் கொண்டனர்.

**NARCO ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்!**

கடந்த மே, 2022 ஆம் ஆண்டு முதல் ஜுன் 2024 வரை மாநிலம் முழுவதும் 266 மாவட்ட அளவிலான NARCO ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநிலம் முழுவதும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனையை தடுக்க காவல்துறை, உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அதிகாரிகள் உள்ளடக்கிய 391 குழுக்கள் கடந்த நவம்பர் 2023 இல் உருவாக்கப்பட்டு தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில், கடந்த ஜுலை 2024 வரையில், 19,332 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சுமார் 177 டன் புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றவாளிகளிட மிருந்து சுமார் 13.16 கோடி ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டதுடன் 8,650 கடைகள் சீல் வைக்கப்பட்டுள்ளது.

**போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறையினருக்கு பதக்கங்கள்**

மாநிலத்தில் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோத கடத்தலை ஒழிப்பதில் சிறப்பான பணியாற்றியதற்காக 2024 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் சிறப்பு பதக்கங்களை, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர். சிவபிரசாத், இ.கா.ப., அவர்களுக்கும், சேலம், மத்திய புலனாய்வுப் பிரிவு, காவல் ஆய்வாளர் பி. ஜகன்னாதன் அவர்களுக்கும், சென்னை, மத்திய புலனாய்வுப் பிரிவு, சார்ஆய்வாளர்

கே. ராஜ்குமார் அவர்களுக்கும், மதுரை மாவட்டம், ஒத்தக்கடை போக்குவரத்து காவல் நிலைய சிறப்பு சார்ஆய்வாளர்

ஆர். அருண் அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ்.மங்கலம் காவல் நிலைய முதுநிலை காவலர் ஆர். துரை அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இன்று மாநிலம் முழுவதும் கைப்பற்றப்பட்ட சுமார் 13,775 கிலோ போதைப்பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் செங்கல்பட்டு, சேலம், தஞ்சை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகுந்த பாதுகாப்புடன் எரித்து அழிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செள.டேவிட்சன் தேவாசிர்வாதம், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், அமலாக்கப் பணியகம் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் முனைவர் அ.அமல் ராஜ், மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் நினைவு மண்டபத்தில் ராஜஸ்தான் யூத் அசோசியேஷன் நடத்தும் 61வது புத்தகம் வழங்கும் ஆண்டு விழாவில், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு, சென்னை செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கினார். இதில் சுரேஷ் கல்பாத்தி, ஸ்ரீகுமார் போம்ரா, கோபால் அகர்வால், மானக்சந்த் கோதி, இராணிடெக் தலைவர் பி.ஆர்.சி.ரமேஷ், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்பு துரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பகுதி து.செயலாளர் டி.வைலேட் மேரி, வட்ட செயலாளர் எல்.தவமணி, வி.வரதராஜன், மோப்பு (எ) சுந்தரேசன், பாஸ்கர், மற்றும் ராஜஸ்தான் யூத் அசோசியேஷன் நிர்வாகிகள், மாணவர்கள் கலந்து கொண்டனர் .

## பல்லுயிர் காக்கும் அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளால்

# யானைகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது!

## உலக யானைகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஆக. 13-

பல்லுயிர் காக்கும் நமது அரசின் ஒருங்கிணைந்த முயற்சி களால் யானைகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

உலக யானைகள் தினத்தை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**சூழலியற் சமநிலையைப் பேணுவதில் யானைகளின் பங்கு அளப்பரியது.**

**தமிழிலக்கியம் முழுதும் பல்வேறு பெயர்களால் யானைகள் குறிப்பிடப்படுவதில் இருந்தே அவை இம்மண்ணுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவை உணரலாம்.**

**பல்லுயிர் காக்கும் நமது அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளால், நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து யானைகளின் எண்ணிக்கை தொடர்ந்து,**

**சீராக உயர்ந்து வரும் மகிழ்ச்சிக்குரிய செய்தியை உலக யானைகள் தினத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம்!

## மாவட்ட செயலாளர்- அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கடலூர், ஆக. 13 -

கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டுதுறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழுக்கூட்டம் நாளை (14.08.2024- புதன் கிழமை) காலை: 10 மணியளவில் நெய்வேலி தொ. மு.ச. அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் டாகடர்.கொ.நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தொ மு ச நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரிதிநிகள் மற்றும் கழக மூத்தமுன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1. இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல்
2. மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல்
3. கழக ஆக்கப்பணிகள்

## அயலக தி.மு.க. குவைத் தளபதி பேரவை சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

## பட்டுக்கோட்டை சரவணன் ஏற்பாட்டில் நிர்வாகிகள் பங்கேற்று அஞ்சலி!

குவைத், ஆக. 13 -

அயலக திராவிட முன்னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பாக, நவீன தமிழகத்தின் தந்தை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியையொட்டி குவைத் பாலிவுட் உணவகத்தில் நடைபெற்ற நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன், ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் தோழர்கள் அம்மையப்பன் செல்வம் செயலாளர், மண்டலம் மதிவாணன் முதன்மைச் செயலாளர், தலைமை நிலைய செயலாளர் சிவக்குமார், பழனி நல்லரசு அமைப்புச்செயலாளர், போத்தியப்பன் அமைப்பாளர்,

கலை, இலக்கிய அணி செயலாளர் அருவிக்கவி ஆனந்த ரவி, ஆலோசகர்கள் மதுக்கூர்பிரேம், சர்தார் கான், ராமலிங்கம், தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் ஆறாம் பண்ணை சேக், பொறியாளர் அணி செயலாளர் பேட்டை பிலால், கொள்கைப் பரப்பு செயலாளர் அன்பழகன், சிறுபான்மை அணி செயலாளர் கொளத்தூர் ஃபெரோஸ் கான் மக்கள் தொடர்பு செயலாளர் காரை பாண்டியன்,

தொழிலாளர் அணி செயலாளர் விஸ்வநாதன், செந்தில்குமார், தமீம் அன்சாரி , சதீஷ்குமார் செய்யது, ராஜா சாதிக்அலி, அப்துல் ரகுமான் முருகேசன் சாமிநாதன் முகமது யூசுப்,மீனவர் அணி செயலாளர் ஆரோக்கியசாமி, தமிழ்ச்செல்வன் அறந்தை முரளி, முருகன், கணேசன், அய்யா சரவணன், முருகேசன் சார்பு அணி நிர்வாகிகளும் கூட்டணி கட்சியான வி.சி.க. கா.மீ அன்பரசன் மகிழன் செல்லத்துரை,

த.மு.மு.க., ம.ஜ.க., இந்திய தேசிய காங்கிரஸ்,இந்திய கம்யூனிஸ்ட் ராஜேந்திரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், செந்தில்குமார், ம.தி.மு.க., இப்ராகிம், முன்னாள் பொருளாளர் பீர்முகமது பகுதிச் செயலாளர் அன்வர்,மண்ணை விஜய், துணைச் செயலாளர் மாயவரம் ராஜா, அலாவுதீன் வலங்கைமான் விஜய குமார், கணேசன், பெருமாள், இனிக்கும் தமிழ் ரபீக் ராஜா, ரமேஷ், ஜாகிர் உசேன், பால்ராஜ், மாயவரம் விஜய், வெங்கடேசன் நவீன தமிழகத்தின் தந்தை முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திரளானோர் கலந்துகொண்டு அனைவரும் மறைந்த தலைவர் கலைஞருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.



திண்டுக்கல் மேற்கு மாவட்டம், நத்தம் தொகுதி, நத்தம் வடக்கு ஒன்றியம், செந்துறை ஊராட்சிக்குட்பட்ட மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த சுமார் 20க்கும் மேற்பட்டோர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர், திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அர. சக்கரபாணி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம், நத்தம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆ.பழனிச்சாமி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.